5th August 1966]

5 லட்சம் தான் கொடுத்தார்கள். இந்த வேலையைப் பொறுத்த வரையில் 8 லட்சம் தேவைப்படுகிறது. அதனால்தான் தற்காலிக மாக இந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் ஜீப்கள்

*139 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப் வண்டிகளுக்கு ஆகும் பெட்ரோல் செலவு, ரிப்பேர் செலவு ஆகியவைகளைச் சர்க்கார் நேரடியாகக் கொடுக்கிறதா?

(இ) ஆமெனில், 1964-65-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு யூனியனுக் கும் பெட்ரோல், ரிப்பேர் ஆகியவைகளுக்குத் தனித்தனியே எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் ஒன்று சபை முன் வைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) 1964-65-ம் ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னிலுள்ள மோட்டார் வாகனங்களுக்கு வாங்கப்பட்ட பெட்ரோல், ரிப்பேர் செலவினங்களின் விவரப்பட்டியல் [a] இத்துடன் இணைக் கப்பட்டு சட்டசபையின் மேசையின் மேல் வைக்கப்பட்டிருக் கிறது.

*140 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1964-65-ல் தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் ஜீப் கார் களுக்கு பெட்ரோலுக்காக செலவழித்தத் தொகை எவ்வளவு?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 1964-65-ம் ஆண்டில் பஞ்சாயத்து யூனியனிலுள்ள மோட்டார் வாகனங்களுக்குப் பெட்ரோல் வாங்கிய வகையில் செலவு 12,18,982 ரூபாய்.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 125 கியாலன் பெட்ரோல் தான் உபயோ கப்படுத்தப்படலாம் என்று ஒரு முறை வைத்திருக்கிறார்கள். இதிலும் எமர்ஜென்சியைப் பொறுத்து 50 காலன் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு போட்டிருந்தும் செங்கற்பட்டு ஜில்லா, ஸ்ரீ பெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனில் 6,000 ரூபாய் பெட்ரோ லுக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் கிணற்றுக்கடவு என்ற யூனியனில் 10 ஆயிரம் ரூபாய் பெட்ரோல் செலவு செய்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?

கனம் திரு. சே. ம. அ மஜீத்: இதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. ஒருவேளை ஜில்லாக் கலெக்டர் அவர்களிட மிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தோ,

a 588–596-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.